# புகலிட நிகழ்வுகள்

## தோழர் ரட்ணசபாபதிக்கு நினைவுக் கூட்டம்

**14.01.2007 — ஞாயிற்றுக்கிழமை**

**கார்ஜ் சார்செல் (பிரான்ஸ்)**

இளஞ்சேய்

2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதியன்று தனது 68வது வயதில் மறைந்த, ஈழப்புரட்சி அமைப்பின் ஸ்தாபகர் தோழர் ரட்ணசபாபதியின் மறைவை யொட்டிய நினைவுக்கூட்டம் 14. 01. 2007 ஞாயிற்றுக் கிழமை மாலை ஈரோஸ் அமைப்பினரின் பிரான்ஸ் கிளையினரால் கார்ஜ் சார்செலில் நடாத்தப்பட்டது. ஈரோஸ் அமைப்பின் தோழர் ரட்ணசபாபதியின் நினைவாக இடம்பெற்ற இக்கூட்டத்திற்கு ஈரோஸ் அமைப்பின் தோழர்களும் ஆதரவாளர்களும் அத்துடன் மாற்று இயக்கங்களைச் சேர்ந்த தோழர் களும் கலந்து கொண்டு தமது அஞ்சலியை தெரிவித்தனர். இந்நிகழ்வுக்குத் தோழர் அழகிரி தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். சுவிஸ், இங்கி லாந்து போன்ற நாடுகளிலும் இருந்து தோழர்கள் வருகை தந்திருந்தனர். இலண்டனில் இருந்து பி. ஏ. காதர் அனுப்பி வைத்த அஞ்சலிக்குறிப்பு வாசிக்கப் பட்டது. பிரபா, யேசுரத்தினம், சுகன், பாலகிருஷ்ணன், அசோக், யோகரட்ணம், ஜென்னி, ரயாகரன், மனோ, தேவதாஸ், குகன், எம்.ஆர்.ஸ்ராலின், மோகன் ஆகியோர் தோழர் ரட்ணசபாபதியின் ஈழவிடுதலைப் போராட்டத்தின் மீதான பங்கு குறித்துத் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.




சுகன் - அழகிரி - ஜென்னி

போராட்டத்தின் ஆரம்பகாலங்களில் இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்ட இயக்கங்கள் தோன்று வதற்குக் காரணமாக இருந்தவரும் மலையக மக்களின் பிரச்சனைகள்மீது பிரத்தியேகமான அக்கறை செலுத்திப் போராடியவரும் என்னும் தளங்களில் தோழர் ரட்ணசபாபதியை நினைவு கூர்ந்தனர். ஈழம், தர்க்கீகம் ஆகிய இதழ்களை ஆரம்பித்து வைத்தவர். அத்துடன் தோழர் ரட்ணசபாபதி அனைத்து இயக்கங் களும் சர்வதேச பயிற்சிபெறக் காரணமாய் இருந்தார் என்பதுடன் விடுதலை இயக்கங்களிடையே ஐக்கி யத்தை ஏற்படுத்த உழைத்தவர்களில் தோழர் ரட்ணசபாபதியின் பங்களிப்பு காத்திரமானது எனவும் நினைவு கூரப்பட்டது.

இந்த நினைவுக் கூட்டத்தின் இறுதியில் தோழர் ரட்ணசபாபதியின் நினைவு நூல் ஒன்றும் ஈரோஸ் அமைப்பின் பிரான்ஸ் கிளையினரால் வெளியிடப் பட்டது.

புகலிட நிகழ்வுகள்

# பொ. கருணாகரமூர்த்தியின் நூல்கள் வெளியீடு

**28.12.2006 — வியாழக்கிழமை**

**பெர்லின் (ஜேர்மனி)**

இரா. றஜீன்குமார்

## இரு நூல்களும் கூடவரும் தமிழ் மனமும்

நூல்கள்:
பெர்லின் இரவுகள் (விவரணம்)
கூடுகலைதல் (சிறுகதைகள்)
ஆசிரியர்: பொ. கருணாகரமூர்த்தி
காலம்: 28. 12. 2006
இடம்: மகாராணி - இலங்கை இந்திய உணவகம், பெர்லின்

காலம் எல்லோரையும் துரத்துகிறது. கலைஞர்கள் காலத்தைத் துரத்த முயற்சிக்கிறார்கள். புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களில் சமகாலத்தில் பலராலும் அறியப்பட்ட எழுத்தாளரான பொ.கருணாகர மூர்த்தியின் இருநூல்கள் வெளியீடு கலாரஞ்சினியின் முன்நடாத்தலில் இனிதே நடந்தது. 'பெர்லின் இரவுகள்' விவரணத் தொகுப்பை சுசீந்திரன் வெளியிட்டுவைத்து அறிமுகவுரையாற்ற, 'கூடு கலைதல்' சிறுகதைத் தொகுப்பை உமா அறிமுகப்படுத்தி எழுத்தாளரின் அனுமதியுடன் அறிமுக - விமர்சனவுரையாற்றினார். தொடர்ந்து தனபாலன், சந்தூஸ், பரமுசிவா, வரத ராஜன் மற்றும் றஜீன்குமார் ஆகியோர் விமர்சனவுரை களையாற்றினர். முதற்பிரதியை நவரத்தினராசாவும், இரண்டாம் பிரதியை சிவஞானமும் பெற்றுக் கொண்டனர். ஆவணப்படுத்தலின் முக்கியம் கருதி அவரவராற்றிய உரைகளின் சாராம்சத்தை மேற்கொண்டு அறிக.

சுசீந்திரன்:

அண்மையில் காலமான கவிஞன் சு. வில்வரத் தினம், மலையகக் கவிஞன் தமிழோவியன், எழுத்தா ளரும் இலக்கியப் பணியாளருமான வரதர் ஆகியோரின் நினைவுகூரலினூடே, எழுதுவதிலும் வெளியிடுவதிலு முள்ள சிரமங்களைச் சுட்டிக்காட்டி நேரத்தை யொறுத்து, தன்னையொறுத்து இந் நூல்களை வெளிக் கொணர்ந்திருக்கும் கருணாகரமூர்த்தியை கௌர விக்க வேண்டிய கடப்பாட்டை வலியுறுத்தி, ஒரு வாடகைக்கார்ச் சாரதியின் இரவு நேர அனுபவங் களை, வாடிக்கையாளர்களின் குணாம்சங்களை, கதையாடல்களை, பெர்லின் பற்றிய தகவல்களை, தொழில் சார்ந்த பிறர் அறியா நுணுக்கங்களை தனக்கே உரிய நகைச்சுவையோடு கேட்போருக்கு ஏற்ற முறையில் சுவாரஸ்யமாகச் சொல்லும் திறன் கருணாகரமூர்த்திக்கு வாய்த்திருப்பதாகக் கூறி இந்த நூலில் அவர் பல நல்ல தமிழ்ச் சொற்களையும் உருவாக்கம் செய்திருப்பதாகக் கூறினார்.

மேற்கொண்டு குறிப்பிடுகையில் ஜெர்மன் சுற்றுலாத் துறை இதையறிந்தால் மொழிபெயர்த்து, விநியோகம் செய்யக்கூடிய அளவுக்கும் ஒரு குறுந்திரைப்படமாக எடுக்கக் கூடிய அளவுக்கும் தகுதி வாய்ந்த இந்த நூல், அவரது இதுவரை வெளிவந்த படைப்புக்களில் உச்ச நிலையில் இருப்பதாகவும் எழுத்து வாலாயம் கைவரப் பெற்ற இவரின் எழுத்துக்களினூடே ஒரு தமிழ் மனம் சேர்ந்து வருவதாகவும் தமிழ் இலக்கிய உலகில் மிகவும் பேசப்படுகின்ற கருணாகரமூர்த்திக்கு உறு துணையாகிய அவரது மனைவிக்கு நன்றி கூறியும் அவரது தொடர் வெளியீடுகளில் அனைவரும் தொடர்ந்து பங்கு கொள்வோம் என்றும் கூறி முடித்துக் கொண்டார்.



# புகலிட நிகழ்வுகள்

உமா:

நாட்காட்டிகளின் துணையோடு நகரும் வாழ்வு போர்ச்சூழலில் மக்களின் கனவுக் கூடு கலைக்கப்பட்டதையும் காலக்கெடு விதித்தும் விதிக்காமலும் 1990 இல் முஸ்லிம்கள் கலைக்கப்பட்டதையும் இதுவரை தொடர் நிகழ்வாய் மக்கள் கலைக்கப்படுவதையும் சிறுவர்களை இராணுவமயப்படுத்தல், சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம், அனைத்தினதும் யதார்த்தத்தின் குறியீடாக 'கூடு கலைதல்' அமைகிறது என்றும் அதில் 'ஆத்தி', 'கூடு கலைதல்' என்பவை தன்னைக் கவர்ந்த சிறுகதைகள் என்றும் சில இடங்களில் இவரது எழுத்துக்கள் வறுமையை, இயலாமையை, அங்கக் குறைபாடுகளை எள்ளி நகையாடுவதாகவும் கூறி, இத்தகைய புண்படுத் தல்கள் இன்றி நல்ல சிந்தனைக்குரிய நகைச் சுவையை வழங்கிய சார்லி சப்ளினையும் நினைவு கூர்ந்தார். 'கதறீனா' என்ற சிறுகதையில் பெண்களை கார்களுக்கு ஒப்பிட்டு இருப்பது மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது என்றும் ஆண் எழுத்தாளர் களின் முதல் இலக்கு பெண்களே என்றும் கூறி வைத்துக் கருணாகரமூர்த்தியின் தொடர் வெளியீடு களில் நாம் அனைவரும் பங்குபெறவேண்டுமென்றும் கூறி முடித்தார்.



கலாரஞ்சனி - சுசீந்திரன் - உமா

தனபாலன்:

வாசிப்பின் முக்கியத்துவத்தையும் வாசிப்பினூடே எழுத்தாளர்களோடும் படைப்பில் வரும் கதாபாத்திரங் களோடும் உரையாட முடியுமென்றும் தேர்ந்த வாசகனே நல்ல விமர்சகனாக முடியும் என்றும் வலியுறுத்தி கருணாகரமூர்த்தியின் 'பெர்லின் இரவுகளி'னூடே நாம் இதுவரையறியாத தகவல்களையும் கலாசார முரண் களையும், கலைச்சொற்களையும் அறிய முடிகிறது என்றும் கூறி வெள்ளையரல்லாத ஒருவர் வெள்ளையர் களைச் சந்திக்கும் தொழில் செய்கின்றபோது தம்மை நல்ல மனிதர்களாகக் காட்ட வேண்டிய தேவை எல்லோ ருக்கும் இருக்கிறது என்றும் அதை, தான் பெர்லின் இரவுகளில் தரிசிப்பதாகவும் தொழில் மகத்துவம் பேணப்படவேண்டும் என்றும் கூறி நூலின் சில சுவாரஸ் யமான பகுதிகளை நினைவு கூர்ந்தார்.

சந்தூஸ்:

பார்வைகள் மனிதருக்கு மனிதர் வேறுபடும் என்றும் புள்ளி விபரங்களில் இருந்து புள்ளிவிபரங்களை எடுப்போர் பற்றி அறிந்துகொள்ள முடியுமென்றும் அதைப்போலவே படைப்புகளில் இருந்து படைப்போரை அறிந்து கொள்ள முடியும் என்றும் யதார்த்தம் என்பது புறவயமாகப் பார்க்கப்படுவது அல்ல என்றும் எழுத் தாளர்கள் தமது அனுவங்களை எப்படி மொழிபெயர்க்கி றார்கள் என்பது முக்கியம் என்றும் நீண்டகாலமாகவே தமிழ்ச் சிறுகதைகள், நாவல்கள் அதற்குரிய நிலப் பரப்பு மொழியை விட்டு நடுத்தர வர்க்க மொழியை வரித்துக்கொண்டிருப்பதாகவும் கே.டானியலின் எழுத்துக்கள் குறிப்பிட்ட நிலப்பரப்பில், குறிப்பிட்ட மனிதர்களின் வேறுவகையான வாழ்வை வெளிக் கொண்டு வருவதாகவும் கூறி கருணாகரமூர்த்தியின் 'பெர்லின் இரவுகள்'இல் வரும் ஒரு முஸ்லிம் பயணி கருணாகரமூர்த்தியை ஒரு முஸ்லிம் என நினைத்து அவரது டாக்சியில் ஏறி, "எனது பணம் ஒரு முஸ்லி முக்கே சேரட்டும்" என்று கூறியதை வைத்து, "இது போன்ற சின்னச் சின்ன செயல்கள் தான் யூதருக்கு எதிரான நாசிகளின் மனோபாவத்தை வளர்த்தது" என்ற வாசகம் ஒருவித வெறுமனே மீள ஒப்பித்தல் என்றும், அது ஆரோக்கியமானதல்ல என்றும் கூறினார். 'என்னினமே என் சனமே' என்ற சிறுகதையில் சாதியம் மேலோட்டமாகப் பார்க்கப்பட்டதென்றும் சாதியம் இன்று வேறு வடிவில் ஆயுத பலத்தில் கட்டிக் காக்கப்படும் நிலைக்குச் சென்றுள்ளது என்றும் குறிப்பிட்ட சந்தூஸ், அந்தக் கதையில் வரும் தமிழனின் மனைவியான ஆயிஷாவை தமிழ்ப் பெண் என்று வரையறை செய்வது மிகவும் நிதானமான யாழ் மையவாதம் எனவும் சுட்டிக் காட்டினார்.

தனது பார்வை இப்படித்தான் இருக்கும் என்று தெரிந்தும், தன்னை விமர்சனம் செய்ய அழைத்த மைக்காக கருணாகரமூர்த்திக்கு நன்றி கூறினார்.

பரமு சிவா:

வளர்ந்துவரும் விமர்சகரான சிவா, கருணாகர மூர்த்தியின் எழுத்துக்கள் இலங்கை, இந்தியப் பேச்சு

# புகலிட நிகழ்வுகள்

மொழியில் கட்டமைக்கப்பட்டிருப்பதாகக் கூறி, கருணாகரமூர்த்தியின் எழுத்தில் கல்வியை வைத்து மக்களைப் பேதம் பிரித்திருப்பதைச் சுட்டிக் காட்டி, சமூகச் சிக்கல்களினால், தான் உயர் கல்வியைக் கற்க முடியவில்லை என்றும் அதனால் இந்த நூலை விமர்சிக்கும் தகுதி தனக்கு இல்லையா என்றும் கேள்வி எழுப்பினார். 2001ம் ஆண்டு திருமறைக் கலாமன்றக் குழுவாக யாழ்ப்பாணம் சென்றிருந்த போது அங்கு ஒரு வீட்டில் தங்களுக்குச் சிரட்டையில் தண்ணீர் கொடுத்ததை நினைவு கூர்ந்த சிவா, சமத்துவம் அற்ற சமூகத்தில் கோஷிக்கப் படும் 'தேசிய ஐக்கியம்' பற்றி ஆதங்கப்பட்டார். விசாவுக்காக வெளிநாடுகளில் தம்மிலும் வயது கூடிய பெண்களை இளைஞர்கள் திருமணம் செய்வது ஒருவகைச் சோரம் தான் என்னும் கருணாகர மூர்த்தியின் கதை மாந்தரின் மொழியைச் சர்ச்சித்த சிவா சீதனத்திற்காக, விசாவுக்காகத் தம்மிலும் வயது குறைந்த பெண்களைத் திருமணம் செய்தால் அது சோரமில்லையா என்றும் எழுத்தாளரிடமும் கூடியிருந்த சபையோரிடமும் கேட்டுவிட்டு நன்றி கூறி அமர்ந்தார்.

வரதராஜா:

தக்க தயாரிப்பின்றித் தான் வந்து விட்டதாகவும் கொஞ்ச நஞ்சத் தயாரிப்பையும் தனக்கு முன் பேசியவர்கள் அள்ளிக்கொண்டு போய் விட்டதாகவும், நேர்மையாகக் கூறிச் சுருக்கமாக முடித்துக் கொண்டார்.



இரா. ரஜீன்குமார்

ரஜீன்குமார்:

ஒரே மூச்சில் படித்து முடிக்கப்பட்ட கருணாகர மூர்த்தியின் இரண்டு நூல்களும் மிகவும் அழகான வேலைப்பாடுகள் கொண்ட படைப்புக்கள். இவரது படைப்புக்களில் வரும் கதைமனிதர்கள், புதிய சொற்கள், தகவல்கள் போன்றவற்றில் இவர் கொண்டிருக்கும் சுயமதிப்பீடுகள் நிதானமாக ஆய்வு செய்யப்பட வேண்டியவை.

1. தியான மாலையுடன் கேளிக்கை விடுதிக்குச் செல்லும் முஸ்லிம்
2. நாசிகளுக்கு யூதர்கள் மீதான வெறுப்பை தூண்டக் கூடியதாக இருந்த காரணங்கள் எனக் கற்பித்தல்
3. ஒரு ஆபிரிக்கனைப் போல் பாவனை செய்த தமிழ் இளைஞனும் தமிழ்ச் சமூகம் மீதான அவனது கசப்பும் இவரது புரிதலும்
4. கள்ளம் நிறைந்த கண்கள் கொண்டதாக இவர் கண்ட ஒரு செக்ஸ் தொழிலாளி
5. முஸ்லிம் அல்லாது செய்யப்பட்ட ஆயிஷா
6. கால் வளைந்த இயக்கக்காரன்
7. காட்டிக் கொடுப்புகள்
8. இயக்கங்களின் கூட்டமைப்பும் அதன் அழிப்பும்
9. திருமணம், சோரம் போதல், விபச்சாரம் பற்றிய இவரது கருத்தியல்
10. பூ விற்கும் பாக்கிஸ்தானி
11. யுத்தத்தாலும் சுனாமியாலும் அழிந்த தமிழ்க் குழந்தைகளின் எண்ணிக்கையை ஈடுகட்ட, புலம்பெயர் தமிழர்கள் நிறையப் பிள்ளைப் பெறுதல்
12. புராணகால இராட்சஷியாக ஒரு ஓராங் ஊட்டானாகச் சித்தரிக்கப்பட்ட வியாளி என்னும் ஈழத்தமிழ் விளிம்புநிலைப்பெண்

இப்படியாக "இரவில் ஜொலிக்கின்ற நட்சத்திரங்களைவிட அவற்றினின் இடையே உள்ள இருள் அதிகமாய்ப் பேசக்கூடும்" என்கின்ற பிரமிளின் கவிதை வரிகளைப்போல், நிறையவே பேசுகின்ற கருணாகர மூர்த்தி அவர்களது அநேகமான ஆக்கங்கள் அவரது out line ஆல் தீர்மானிக்கப்படுவன. மிகவும் ஆழமான படைப்புக்கள் அல்லது மகா படைப்புக்கள் எல்லாம் கதைக்களத்துள் கதை மாந்தர்களை உள்இறக்கி, அவர்களை எழுதுபவர்களின் சுய மதிப்பீடு இன்றி சுதந்திரமாக நடமாட விடுபவை. இவ்வகை முயற்சிகளை எதிர்காலத்தில் கருணாகரமூர்த்தி செய்வாராயின் தமிழுக்கும் நவீன படைப்புலகிற்கும் மேலும் உரம் சேர்ப்பார். இவரது சில படைப்புக்களைச் சாத்தியப்படுமாயின் தனித்த விமர்சனம் எழுதலாமென்றிருக்கிறேன்.

# புகலிட நிகழ்வுகள்

கருணாகரமூர்த்தி:

முடிவில் ஏற்புரையாற்றிய கருணாகரமூர்த்தி அவர்கள், முன் வைக்கப்பட்ட விமர்சனங்களை இன்முகத்துடன் எதிர்கொண்டார். தான் விமர்சனங்களை உள்வாங்கியுள்ளதாகவும் தான் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான் என்றும் தன்னால் அப்படித்தான் எழுத முடியும் என்றும் கூறினார்.

( கார்ல் மார்க்ஸ் கூட நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர் தான். நாங்கள் எல்லோரும் தான். ஆனால் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் பார்வை என்பதும் வேறுவேறானவை.)

முடிவில் அனைவருக்கும் நன்றி கூறினார் கருணாகரமூர்த்தி.

**பெர்லின் இரவுகள் (கட்டுரைகள்)**
ஆசிரியர்: பொ. கருணாகரமூர்த்தி
வெளியீடு: உயிர்மை பதிப்பகம்
11/29 சுப்பிரமணியம் தெரு
அபிராமபுரம்
சென்னை 600 018
தமிழ்நாடு, இந்தியா.
e-mail: uyirmmai@yahoo.co.in
தொலைபேசி: 00914424993448

**கூடு கலைதல் (சிறுகதைகள்)**
ஆசிரியர்: பொ. கருணாகரமூர்த்தி
வெளியீடு: கனவுப்பட்டறை
3 பிரகதாம்பாள் தெரு
நுங்கம்பாக்கம்
சென்னை 600 034
தமிழ்நாடு, இந்தியா.
e-mail: kanavuppattarai@kanavuppattarai.com
தொலைபேசி: 00914428216373

✦ ✦ ✦ ✦ ✦

## இலங்கை அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த கலந்துரையாடல்

**10.12.2006 — ஞாயிற்றுக்கிழமை**

**(இங்கிலாந்து)**

**இளவேந்தன்**

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக இலங்கை ஜனாதிபதியினால் அமர்த்தப்பட்ட 18 பேர் கொண்ட வல்லுநர் குழுவின் 11 உறுப்பினர்கள் (6 சிங்களவர்கள், 4 தமிழர்கள், 1 முஸ்லீம்) பெரும்பான்மை அறிக்கையை (Majority Report) டிசம்பர் 6ம் திகதியன்று வெளியிட்டுள்ளனர். இந்நிபுணர்கள் குழு பிரிவினை வாதத்திற்குத் துணை போவதாகக் கூறி டிசம்பர் 12ம்திகதியன்று All Party Representative Committee (APRC) இருந்து தாம் வெளியேறுவதாக ஜேவிபி இன் தலைவர் சோமவன்ச அமரசிங்க செய்தியாளர்களுக்குத் தெரிவித்து உள்ளார்.

இலங்கையைப் பல்லின, பல்வேறு மதங்கள் கொண்ட தீவாக கணித்துள்ள இவ்வறிக்கையானது மாகாண சபைகள், உள்ளாட்சி சபைகள் மூலமாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளவும் பரவலாக்கவும் வழிவகைகளைக் கண்டுள்ளது. சிறுபான்மையினருடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளாததே நிலைமை இவ்வளவு மோசமடைந்ததற்குக் காரணமெனக் குறிப்பிடும் இவ்வறிக்கை முழுமையான அதிகாரப் பரவலாக்கலை ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தி உள்ளது. மேலும் ஜனாதிபதியாக உள்ளவரின் இனத்தைச் சாராத இரு வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் துணை ஜனாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

இவ்வறிக்கை தொடர்பான அரசியல் கலந்துரையாடல் தமிழ் சமாதான ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. றைஸிலிப்பில் 2006ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ம் திகதியன்று இடம்பெற்ற இச்சந்திப்பிற்கு அரசியல் ஆய்வாளர் வி. சிவலிங்கம் தலைமை தாங்கினார்.

இந் நிபுணர்களின் தீர்வுத் திட்டத்தில் சில பலவீனமான அம்சங்கள் இருந்தாலும் கட்சி அரசியலுக்கு அப்பால் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று எனப் பெரும்பாலும் அனைவரும் அதனை வரவேற்றனர்.

மேலும் இத்தீர்வுத் திட்டத்தினை சகல தரப்பினரும் ஏற்றுக் கொண்டு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வர வேண்டும் என்பதும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

# ரவிராஜ் நினைவுக் கூட்டம்

**09.12.2006 — சனிக்கிழமை**

**கனடா**

**வினோதன்**

## படுகொலை ஒன்றின் 31ம் நாள் நினைவு

படு கொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் 31ம் நாள் நினைவு தினம், அவருடன் கல்வி கற்ற, யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்களால் Scarborough Borrws Hall இல் மார்கழி 09ம் நாள் நண் பகல் 11:00 மணிக்கு நடைபெற்றது.

அன்ரன் பால்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முன்னாள் யாழ்.பரியோவான் கல்லூரி ஆசிரியர் திரு. தவராஜலிங்கம், மூத்த பத்திரிகை யாளர் டி.பி.எஸ். ஜெயராஜ், சக மாணவன் ம.ரகுநாதன் (ரதன்) ஆகியோர் உரையாற்றினர். சுமார் 75 மாணவர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோருடன், படு கொலை செய்யப்பட்ட முன்னாள் யாழ்.பரியோவான் கல்லூரி அதிபர் ஆனந்தராஜாவின் துணைவியாரும் கலந்து கொண்டனர்.

திரு குமார் பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸில் கொழும்பு மாநகரசபை வேட்பாளராக தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த ரவிராஜ், பின்னர் யாழ் மாநகரசபை உதவி மேயராக. மேயராக, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தார்.

தனித்தமிழ் ஈழத்தை ஆதரிக்காத ரவிராஜ், சிங்கள மக்கள் மத்தியில் ஒன்றிணைந்த இலங்கையில் மாநில சுயாட்சிக்கான பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தார். இவ்வாறு செயல்பட்ட ஒரே தமிழ் பா.உ. ரவிராஜ் ஆகத்தான் உள்ளார்.

எந்தத் தனிமனித கொலையும் ஏற்றுக் கொள்ள முடியாது. இக் கொலைகள் குளத்தில் எறியும் கல் போன்றது. ஓர் அதிர்வை ஏற்படுத்திவிட்டு அடங்கிவிடும். ஒருவனின் மரணத்தில் எமது வெற்றியை "மண்டையில் போட்டுவிட்டார்கள்" எனக்கூறி கொண்டாடுகின்றோம். இது தான் எமது பகுத்தறிவின் கூர்ப்பு.

ரவிராஜ் தனது மரணத்தை யாழ் மேயராக இருந்த காலங்களில் இருந்து எதிர்பார்த்தார். யாழ் மேயராக இருந்தவர்களில் இவர் ஒருவர்தான் உயிருடன் இருந்தார். இப்பொழுது அதுவும் இல்லை. தனது வீட்டு



வாசலில் தனக்காக மரணம் காத்து நிற்கிறது என்று தெரிந்தும், மரணத்தை எதிர்கொண்டார்.

அவரது மகள் கூறியது போல்,

இவரது கொலையை உலகம் சில காலங்களில் மறந்து விடும். ஏனெனில் மற்றொரு கொலை காத்து நிற்கின்றது.

சவப்பெட்டிகளுக்கு
பிணம்
யாருடையது
என்பதில்
அக்கறையில்லை

# புகலிட நிகழ்வுகள்

## இலண்டன் தமிழ்க் குறுந்திரைப்பட விழா - 2006

**25.11.2006 — சனிக்கிழமை**

**இங்கிலாந்து**

**இளவேந்தன்**

இலண்டன் 'விம்பம்' கலை இலக்கிய அமைப்பினரின் மூன்றாவது குறுந்திரைப்பட விழா 25.11.2006 சனிக் கிழமை அன்று இலண்டன் புறநகர்ப் பகுதியில் உள்ள லூஷியம் என்னுமிடத்தில் நடைபெற்றது. இதில் திரையிடலுக்குத் தெரிவு செய்யப்பட்ட 11 குறுந்திரைப் படங்கள் ஐக்கிய அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா, நெதர்லாந்து, கனடா, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்து வந்திருந்தன.

நா. சபேசன் அவர்களின் அறிமுக உரையுடன் நிகழ்வு ஆரம்பமாகியது. இக்குறுந்திரைப்பட விழா வானது தரமான சினிமாத்துறை பற்றிப் பேசப்படாத ஒரு காலத்தில் தமிழில் திரைப்படம் குறித்த கருத்தாடல் களை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்த அண் மையில் மறைந்த ஏ. ஜே. கனகரட்னா என்னும் விமர்சகருக்கு காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விழாவில் விம்பம் அமைப்பைச் சேர்ந்த மு. நித்தியா னந்தன் அவர்கள் தனது சிறப்புரையில், " 'வேதாந்தி கள் கைக்குள் சிக்கிக் கொள்ளாத கடவுள்' என்று புதுமைப்பித்தன் சொன்னது போல, குறும்பட மொழி யானது இவர்கள் பிடிக்குள் அகப்பட மறுத்துள்ளது. வாய்ப்பாடாகிப் போய்விட்ட திரைப்படச் சட்டகச்சேறு குறும்படத் தயாரிப்புகளிலும் நிறையவே அப்பிக் கொண்டுவிட்டது. வாழ்க்கைத் தரிசனமும், கதை சொல்லும் நேர்த்தியும், ஒளிப்பதிவும், பாத்திரங்களின் நகர்வும், நறுக்குத் தெறித்த உரையாடலும் இணைந்து பலம் சேர்க்க வேண்டிய குறும்பட மொழி இன்னும் நமது கலைஞர்களுக்குப் பூரணமாக வசப்படவில்லை என்றே தோன்றுகின்றது" என்று கூறிய அவர், மேலும், "இந்தக் கலைஞர்களின் முயற்சிகள் சரியான வகையில் ஊக்கு விக்கப்படும்போது அவை தரமான திரைப்படங்களைத் தயாரிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் என்ற எங் களின் நம்பிக்கை வீண்போகாது என்று நம்புகிறோம்" என்றும் தெரிவித்தார்.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக வருகை தந்தி ருந்த சு. பேரின்பநாதன் அவர்கள், "விம்பம் அமைப் பானது சீரிய கலை, இலக்கிய முயற்சிகளில் அக்கறை காட்டி வருவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். மணக்கால் எஸ். ரங்கராஜன் போன்ற இசை மேதை களை வரவழைத்தும், குறுந்திரைப்பட விழாக்களை மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து நடாத்தியும் விம்பம் சாதனை புரிந்திருக்கின்றது" என்று தனதுரையில் குறிப்பிட்டார்.

இக் குறுந்திரைப்பட விழாவுக்காக வெளியிட்ட கையேட்டில் யமுனா ராஜேந்திரன் எழுதிய 'விளிம்பு



# புகலிட நிகழ்வுகள்



மறைபொருள்

நிலை மக்களின் உலகு' என்னும் கட்டுரையில் இருந்து சில பகுதிகளை இவ்விடத்தில் தருவது, விம்பம் அமைப்பினரின் குறுந்திரைப்பட இயக்கம் பற்றிய நோக்கை ஓரளவு கண்டுகொள்ள உதவும்.

அவர் இப்படிக் குறிப்பிடுகின்றார்:

"புகலிட நாடுகளின் குறும்படங்கள் அதிகமும் விமர்சன அரசியல் கொண்டவர்களிடமிருந்தே வருகின்றன."

"தமிழ்க் குறும்படங்களின் அறுதியான குணாம்சம் என ஒரு விஷயத்தை நிச்சயமாகச் சொல்லமுடியும். தமிழ் வெகுஜன சினிமாவினால் புறக்கணிக்கப்படும் விளிம்புநிலை மக்களின் பிரச்சினைகளை, அவர்களது வாழ்வின் துயரை இந்தப் படங்கள் பேசுகின்றன. கடந்த பத்து ஆண்டுகளாக நான் பார்த்த காத்திரமான தமிழ்க் குறும்படங்கள் அனைத்துமே விளிம்புநிலைத் தமிழ் மக்களது வாழ்வு பற்றியவை. அவை தலித் மக்களது ஆவேசம் குறித்தவை, கையறுநிலைக் குழந்தைகள் பற்றியவை, கோபமுற்ற பெண்கள் பற்றியவை, உரிமைக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர் துயர் பற்றியவை, அகதி வாழ்வின் துன்பம் பற்றியவை, அநாதைப் பிணங்கள் பற்றியவை, அரவாணிகளின் சோகம் குறித்தவை. இவர்களது வாழ்வு வெகுஜன தமிழ் சினிமாப் படங்களில் பிரதிநிதித்துவப்படுத்தப் படுவதில்லை என்பதை நாம் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

புகலிடப் படங்கள் தமிழ்மொழிப் பரப்பில் புதிதாக உருவாகிவரும் ஒரு போக்காகும். புகலிட சினிமா என்பது ஈழத்தமிழர்களின் சினிமாவின் இன்னொரு பிரிவு எனலாம். ஏனெனில் ஈழத்தில் விடுதலைப் போராட்டம் சார்ந்த பிரச்சினைகளை மையம் கொண்டதாக இன்று குறும்படங்களும் விவரணப் படங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. புகலிடப் படங்கள் ஐரோப்பாவுக்குக் குடிபெயர்ந்தவர்களின் அகதி வாழ்வின் துயர் பற்றிய படங்களாகும்."

"அரசு அனுசரணையுடனும் பெரும் நிறுவனங்களின் ஆதரவிலும் ஹொலிவுட் சினிமாவின் ஆதிக்கத்துடனும்தான் இன்று பெரும்பாலான திரைப்பட விழாக்கள் நடந்தேறுகின்றன. இந்த வகையில் கலைநோக்கும் சமூகப் பிரக்ஞையும் கொண்டவர்கள் தமக்கேயான திரைப்பட விழாக்களை உருவாக்கி வருகிறார்கள். நேபாளத்தில் இயங்கும் ஹமல் திரைப்படவிழா அதற்கொரு உதாரணம். தம்மீது தணிக்கை திணிக்கப்பட்டதால் இந்தியாவில் அதிகாரபூர்வ ஆவணப்பட விழாவிலிருந்து வெளியேறி ஆவணப்பட இயக்குநர்கள் தமக்கேயான விழாவொன்றை ஏற்பாடு செய்துகொண்டார்கள் என்கிற செய்தியினையும் நாம் குறித்துக்கொள்ள வேண்டும்.

ஹமல் அமைப்பின் விழா இப்போது மேற்கத்திய நாடுகளிலும் பரவி வருகிறது. 'நிழல்' நடத்தும்



சு. பேரின்பநாதன் - பி. எஸ். சுதாகரன்

# புகலிட நிகழ்வுகள்

குறும்படப் பட்டறைகள், காஞ்சனை திரைப்பட இயக்கத்தின் முயற்சிகள் இத்தகைய தன்மை கொண்டவை. புகலிட நாடுகளிலும் இலண்டனில் இயங்கும் 'விம்பம்', கனடாவில் இயங்கும் 'சுயாதீன திரைப்படக் கழகம்' போன்றவை இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன."

இந்த குறுந்திரைப்படங்களின் விருதுகளுக்கான தெரிவுக்குழுவில் யமுனா ராஜேந்திரன், மு. நித்தியானந்தன், மு. புஸ்பராஜன், றஜிதா சாம், தோழர் வேலு, மீனாள் நித்தியானந்தன், புதியவன், யூட் இரட்ண சிங்கம், சாம் பிரதீபன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

இவ்விழாவில் பரிசு பெற்றவர்களின் விபரம் வருமாறு:

சிறந்த திரைப்படம்:
மறைபொருள் (பொன் சுதா (இந்தியா))

புகலிடத்தின் சிறந்த திரைப்படம்:
மனசு (பி. எஸ். சுதாகரன் (கனடா))

சிறந்த இயக்குநர்:
பி. எஸ். சுதாகரன் (மனசு, கனடா)

சிறந்த தொகுப்பாளர்:
எஸ்.வி.ஜெயராஜ் (ஈழத்துப்பூக்கள், லண்டன்)

சிறந்த ஒளிப்பதிவாளர்:
ரவி அர்ச்சுதன் (மனசு - கனடா)

சிறந்த திரைப்பிரதி:
எஸ்.சண்முகம் (தொடரும்நாடகம், டென்மார்க்)

சிறந்த நடிகை:
யசோதா கந்தையா (கழுவாய், கனடா)

சிறந்த நடிகர்:
பி. எஸ். சுதாகரன் (மனசு, கனடா)

க.கிருஷ்ணராஜா (ஓவியர்), சி. சாந்தகுணம் (புகைப் படக் கலைஞர்) இவர்களுடன் போல் நரேஷ், எஸ்.சங்கர், பத்மநாப ஐயர் ஆகியோரும் இணைந்து விம்பம் குறுந்திரைப்பட விழாவைக் கச்சிதமாக நடத்தினர்.

கனடாவில் இயங்கிவரும் சுயாதீன திரைப்பட மையமும் இலண்டன் தீபம் தொலைக் காட்சியும் இக் குறுந்திரைப்பட விழாவிற்கு ஆதரவளித்தன.

## திருமறைக்கலாமன்றம் - கலைவண்ணம் 2006

**19.11.2006 — ஞாயிற்றுக்கிழமை**

**ஒபவில்லியே — பிரான்ஸ்**

**மரியதாஸ்**

உலகெல்லாம் கிளை பரப்பியதோடு மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் கிளை பரப்பி காலத்தால் அழியாமல் புடமிட்டு, பழைய கலைவடிவங்களைப் பாதுகாத்து வருகின்ற திருமறைக்கலாமன்ற பாரிஸ்கிளையின் கலைவண்ணம் 2006, கார்த்திகைத் திங்கள் 19ம் நாள் ஒபவில்லியே (பாரிஸின் புறநகர்ப் பகுதி) என்னுமிடத்தில் மாலை 5.00 மணிக்கு நேரம் தவறாமையை மெய்மையாகக் கடைப்பிடித்து குத்து விளக்கு ஏற்றும் நிகழ்ச்சியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பாரிஸ் கிளையின் தலைவர் திரு. வரதராஜா அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

திருமறைக்கலாமன்றத்தின் கீதம் இசைக்கப் பட்டதும் கடந்த வருடம் அகால மரணமடைந்த ஆர்மோனியக் கலைஞர் றொபேட் அவர்களுக்கு அஞ்சலி நிகழ்ச்சியொன்று இடம் பெற்றது. பாரிஸ் கிளையின் உறுப்பினரும் மன்றத்தின் பாரிஸ் கிளையினர் மேடையேற்றிய நாட்டுக் கூத்துகள், இசை நாடகங்கள் போன்றவற்றிற்கு ஆணிவேராக இருந்து பல புதிய கலைஞர்களை உருவாக்கி, ஐரோப்பா எங்கும் ஈழத்துத் தமிழ் பாரம்பரியக் கலைகளை மேடையேற்ற பக்க பலமாக இருந்தவர். அவரால் பயிற்றுவிக்கப்பட்ட பாடல்களைப் பாடிச் சமர்ப்பித்தனர்.

இவைகளைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஒலி ஒளி அமைப்புக்கான வாய்ப்புகள் மண்டபத்தில் இருந்தபோதும் அவை சரியாகப் பாவிக்கப்படாமை வருத்த்திற்குரியது.

கவிதா நிகழ்வொன்று நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பெண்பிள்ளைகளின் கர்நாடக இசை நிகழ்ச்சி மேடையேறியது. புலம்பெயர் வாழ்வில் பரதக் கலையைப் பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பயிற்றுவிப்பதன் மூலம் சமூகத்தில் ஓர் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுவிடலாம் என்ற ஒரு மனப் பான்மையில் பல்லாயிரம் யூரோ செலவில் பயிற்றுவித்து அரங்கேற்றத்துடன் அதை மறந்துவிடுகின்றார்கள். கர்நாடக சங்கீதமும் அப்படி ஆகாமல் பெற்றோர் பார்த்துக் கொள்வார்களா?

# புகலிட நிகழ்வுகள்

இளைஞர்களின் தொடர் நடன நிகழ்ச்சி இடம் பெற்றது. இளைஞர்கள் இதனை உற்சாகத்துடன் வரவேற்றனர். திருமறைக்கலாமன்றத்தின் வழமையான பார்வையாளர்களை இது சங்கடத்தில் ஆழ்த்தியதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. காலமாற்றமும் கட்டாயத் தேவையும் விரும்பியோ விரும்பாமலோ வாழ்க்கையில் புகுந்து விடுகின்றது. உதாரணமாக, மரபுக் கவிதையில் இருந்து புதுக் கவிதை பிறந்த போதும், கர்நாடக சங்கீதத்தில் இருந்து மெல்லிசைப் பாடல்கள் வந்தபோதும், பின் மெல்லிசையில் இருந்து துள்ளிசை பொப் பாடல்கள் என்று வந்தபோதும் ஏற்பதற்குத் தயங்கிய சமூகம் இன்று அவற்றை ஏற்றுக் கொண்டுள்ளது. அதைப்போலவே நாட்டுக் கூத்து, இசை நாடகமாக, சமூக நாடகமாக, மௌன நாடக மாக, குறியீட்டு நாடகமாகப் பரிணாமமடைந்ததை இன்று ஏற்றுக்கொண்டுதான் இருக்கின்றது.

அடுத்து, ஓசை மனோவின், எட்டு குறுஞ் சித்தி ரங்கள் அடங்கிய கதம்ப நிகழ்ச்சி இடம்பெற்றது. முதலாவதாக இரு பெண்களும் ஒரு ஆணும் ஒரு சினிமாப் பாடலுக்கு அபிநய நடனம் புரிந்தனர். பாவிக்கப்பட்ட உத்திகள் பலரின் பாராட்டையும் பெறச் செய்தது. பின் மூத்த கலைஞர்கள் பங்குகொண்ட கவிதா நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இன்னும் அதிக மான பயிற்சியுடன் மேடையேற்றம் கண்டிருக்கலாமோ என்றெண்ண வைத்தது. தொடர்ந்து இலவச தொலை பேசியினால் ஏற்படும் பாதகமான அம்சங்களை மட்டும்எடுத்துக் காட்டிய ஒரு குறியீட்டு நாடகம் இடம்பெற்றது. பின்னர், பந்து விளையாட்டும் கலவரமும் என்ற கருத்தில் ஓர் நிகழ்வு.

இன்று வன்முறைகள் இல்லாத சினிமாவே இல்லை என்ற நிலை மலிந்து கிடக்கின்றது என்று ஏங்கிப் போய்க் கிடக்கும் காலத்தில் மேடை நிகழ்ச்சிகளிலும் வன்முறைகளா? தவிர்த்திருக்கலாம். தொடர்ந்து நாட்டுக்கூத்துப்பாடல் இடம்பெற்றது. பொருள் விளங்காவிட்டாலும் இளைய தலைமுறையினரும் ரசிப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அடுத்த நிகழ்ச்சியாக (மிமிக்கிரி) மாற்றுக் குரல் நிகழ்வொன்று இடம்பெற்றது. பரவலாக இன்று மிமிக்கிரி வடிவம் வளர்ந்து கொண்டு வருகின்றபோதும், அன்றைய நிகழ்ச்சி இன்னொரு நாட்டு மக்களின் பேச்சு வழக்கை அதுவும் தமிழை கொச்சைப்படுத்தியதாகத் தான் கருத முடிந்தது. ஒரு சமூகத்தை கொச்சைப் படுத்தும் நிகழ்ச்சியை இனிமேலும் தவிர்ப்பது நல்லது.

திருமறைக்கலாமன்றத்தின் பாரிஸ் கிளையின் 2006 கலைவண்ணம் ஓர் புதிய மாற்றத்தை எடுத்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. குறிப்பாக, மன்றத்தில் இருக்கின்ற கலைஞர்களே பொதுவாக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள். இம்முறை பல புதிய இளைய கலைஞர்கள் உள்வாங்கப்பட்டுள்ள தோடு, மன்றத்திற்கு வெளியில் இருந்தும் நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. இது திருமறைக்கலாமன்றத்தின் எதிர்கால வாசல்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகக் கருத இடமுண்டு. மூத்த கலைஞரும், நாடக, சினிமாப் படங்களின் நடிகரும், தயாரிப்பாளருமான திரு. ஜெயசிங்கம் அவர்கள் கௌரவிக்கப்பட்டமை ஓர் சிறப்பு அம்சமாகும். அவரின் ஆற்றல்களும் திறமைக ளும் அவரினால் அங்கு வெளிப்படுத்தப்பட்டமையும் அவருடைய கௌரவிப்புக்குச் சான்றாகும்.

* * * * *

## ஏ.ஜே. நினைவுக் கூட்டம்

**18.11.2006 — சனிக்கிழமை**

**இலண்டன் (இங்கிலாந்து)**

இளவேந்தன்

### ஏ. ஜே. என்றொரு சகாப்தம்

அண்மையில் ஈழத்தில் மறைந்த விமர்சகரும் அறிஞருமான ஏ. ஜே. கனகரட்னா அவர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று இலண்டனில் உள்ள வால்தம்ஸ்ரோவில் 18.11. 2206 சனிக்கிழமையன்று நடைபெற்றது. இந்த அஞ்சலிக் கூட்டத்தை விம்பம் கலை இலக்கிய அமைப்பினர் ஒழுங்கு செய்திருந்தனர்.

சபேசன், மாலி, யமுனா ராஜேந்திரன், நிர்மலா ராஜசிங்கம், புஷ்பராஜன், நித்தியானந்தன், பத்மநாப ஐயர், சிவரஞ்சித், பாலசுகுமார் ஆகியோர் ஏ. ஜே. பற்றிய ஆளுமைகளையும், அவருடனான தங்கள் அனுபவங்களையும், அவரோடு கூட இருந்த நாட்கள் பற்றியும் கனத்த இதயத்துடன் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வினையொட்டி விம்பம் கலை இலக்கிய அமைப்பினரால் சிற்றேடொன்று வெளியிடப்பட்டது. இதில் இடம்பெற்றிருக்கும் 'ஏஜே : அகலத் திறந்த ஆழக் கண்கள்' என்னும் பாக்கியநாதன் அகிலனின்

# புகலிட நிகழ்வுகள்




கட்டுரை யில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"ஏஜேயின் மிக முக்கியமான பண்பு, அவர் தமது காலத்தின் மேலாண்மை அலைகளால் அடித்துச் செல்லப்படாதவர் என்பது மட்டுமன்றி, அவற்றிற்கு வெளியே தனக்கான தனித்துவமான நிலைப்பாடு களுடன் இருந்தாரென்பதுமாகும். குறிப்பாக, 1960, 1970களில் மார்க்சிய - இடதுசாரிச் சிந்தனைப் பேரோட்டம் முதன்மை பெற்றோடிய நமது சூழலுக்குள் ஏஜேயின் எழுத்துகளும் அவற்றைப் பிரதி பலித்தன. ஆயினும் ஏஜே ஒருவகையில் அந்தப் பேரோட்டத்தின் முதன்மை அலையெறிவுக்கு வெளியிலேயே இருந்தா ரெனக் கூறலாம். அவர், தமது சகபாடிகள் - மார்க்சிய அறிஞர்கள் என அறியப்பட்டோர் மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் நிலைப்பாட்டிலிருந்து அதிகம் விலகியே இருந்தார். அவரிடம் பண்டித மார்க்சியம் இருக்க வில்லை. அது அவருக்கு 'ஆப்த வாக்கியம்' அல்ல. அவரது வாசிப்பும் - பண்பும் அதற்கு அனுமதிக்கவு மில்லை. பதிலாக அவர் மார்க்சியத்தை விமர்சன பூர்வமாகப் பார்த்தவராக - அதன் புதிய, மாறும் சிந்த னைகளை வரவேற்கும் தமிழ் முன்னோடிகளில் ஒருவராகவும் இருந்தார். குறிப்பாக, தமிழ்ப் பண்பாட்டு வட்டகையில் கலை - இலக்கியம் தொடர்பாக மார்க்சியம் கொண்டிருந்த கட்டுப்பெட்டித்தனங்களை தகர்க்கத்தக்க, 'அடிக்கட்டுமானம் - மேற்கட்டுமானம்' தொடர்பான செந்நெறி மார்க்சிய அடிப்படைகளை கேள்விக்குள்ளாக்கும் எழுத்துகளை, பண்டித மார்க் சியம் கோலோச்சிய காலத்தில் ஏஜே அமைதியாக முன்வைத்துக்கொண்டிருந்தார். இது கோபர்ச்சேவின் 'பெரெய்ஸ்ரொய்கா - கிளாஸ்ரிநொஸ்ற்' வரை தொடர்ந்தது. குறிப்பாக றெஜி சிறிவர்த்தனவிடமிருந்து அவர் தமிழுக்குக் கொணர்ந்த முதன்மையான கையிருப்பு இவற்றோடுதான் அதிகம் தொடர்புபட்டி ருந்தது. இதுபோலவே தேசிய இனப்பிரச்சினையில், மார்க்சியத்தின் கோட்பாட்டு நிலைப்பாடு தொடர்பாக ஈழத்தில் தமிழர் உரிமைப் போராட்டத்துடன் எழுந்த கேள்விகள் மத்தியில் ஏஜே கொண்டிருந்த நிலைப் பாடும், அது தொடர்பில் அவரது உழைப்புகளும் முக்கி யமானவை. குறிப்பாகப் பல்கலைக்கழக மறுமலர்ச்சி கழகத்திற்காக ஏஜே மொழிபெயர்த்த 'எல்லாளன் சமாதியும் வரலாற்று மோசடியும்' தொடக்கம் 'அலை' வெளியீடாக வந்த 'மார்க்சியவாதிகளும், தேசிய இனப் பிரச்சினையும்' என்ற நூல் வரை, சிலவேளை அவரது பெயர் தரிக்காது வந்ததாக அறிய முடிகின்ற, இது தொடர்பான வெளியீடுகள்வரை மிக முக்கியமானதே. மட்டுமன்றி இதே சுற்றுக்குள் அடித்த முற்போக்கு அலை வீச்சினுள்ளும் ஏஜேயின் எழுத்துகள் அதனை வற்புறுத்திய பலரது முறையிலிருந்தும் விலகியதும், சர்வதேசத்தன்மையான அளவுகோல்களை உடையது மாகும். 'தேசிய இலக்கியம்: சில சிந்தனைகள்' என்ற, 1961இல் 'மரகதம்' இதழில் எழுதிய அவர் கட்டுரை இதற்குத் தகுந்த சான்றாகும். எல்லோரும் ஒரே திசை யால், ஒரே மாதிரியாகக் கத்திச்செல்கையில் நிதான மாகத் தனது நியாயப்பாடுகளுடன் இருத்தலென்பது ஓர் அறிஞனின் மூலமான குணாம்சமாக இருக்கும். அது ஏஜேயிடம் இருந்தது. ஆகவேதான் ஏஜே எவ்வளவுக்கு எவ்வளவு தன்னைத் தாழ்த்திக்கொண்டாலும் உயரத் தில் தெரியும் தாரகைகளில் ஒருவராக உள்ளார்.

நினைவு ஒரு பாரம்;நினைவு ஒரு வலி. ஏஜே நினை வாகிப் போனார்.

சீனக் கவிஞர் பைஜிங்கின் (கி.பி. 7 - 8) சுயவுரு

# புகலிட நிகழ்வுகள்

பற்றிய கவிதை ஒருவகையில் ஏஜேயைப் பற்றியது போல எனக்குத் தோன்றியது.

பைஜிங்கின் அந்தக் கவிதையுடன் இந்தக் கட்டுரை விடைபெறுகிறது.

*சிவந்த கன்னங்கள் - நரைத்த தாடி*
*இது வைன் குடித்த நான்*
*கடைசியில்*
*வருஷங்கள் எல்லாம் ஓடிக் கழிந்த பின்*
*இப்போதெல்லாம் வெறுமையாகத் தோன்றுகிறது.*
*நான் வயோதிகனாய்*
*நோய் கண்டவனாய்*
*ஒல்லியாய் இருந்த போதிலும்*
*கவிதைகள் மீதான காதல்*
*இன்னும் மீதமிருக்கிறது*
*பிரியமான ஒரு கனவான்*
*ஒரு திரையில் வரையப்பட்டதான*
*என் உருவ ஓவியத்தை வைத்திருக்கிறார்*
*என்றறிந்த போது கொஞ்சம் சிரித்தேன்.*







## இலண்டன் தமிழ் நாடக விழா - 2006

**17.11.2006 — வெள்ளிக்கிழமை**

**இங்கிலாந்து**

**மணிவாசகன்**

### தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தின் நாடகவிழா 2006

இலண்டன் தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் வருடாந்த நாடகவிழா 2006, கடந்த நவம்பர் 17ம் திகதி வடமேற்கு இலண்டன் பகுதியில் அமைந்துள்ள வின்ஸ்டன் சேர்ச்சில் தியேட்டரில் நடைபெற்றது. க. பாலேந்திராவின் நெறியாள்கையில் திக்குத் தெரியாத காட்டில், மலைகள் வழி மறித்தால், அவசரக்காரர்கள், காத்திருப்பு, சர்ச்சை ஆகிய நாடகங்கள் மேடையேறின. மா. சத்தியமூர்த்தி, தர்சினி சிவசுதன் ஆகியோர் நாடகங்களைத் தொகுத்து வழங்கினர் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட நாடகங்களை ஒரே மேடையில் பார்க்கும் அனுபவம் தனித்துவமானது.

திக்குத் தெரியாத காட்டில்:

அண்மையில் மறைந்த அறிஞர் ஏ.ஜே. கனகரட்னாவுக்கு இந்த நாடகவிழா சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவருடைய நினைவுக்காக அவரால் 1976ல் 'அலை' சஞ்சிகையில் அறிமுகம் செய்யப்பட்ட வார்த்தைகள் ஏதுமற்ற குறுநாடகம் மேடையேறியது. 1969ல் நோபல் பரிசு பெற்ற அயர்லாந்தைச் சேர்ந்த சாமுவெல் பெக்கற் பிரெஞ்சுமொழியில் எழுதிய நாடகம் இது. இப்பிரதி 1978ம் ஆண்டு கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் பாலேந்திராவினால் மேடையேற்றப்பட்டது. தனிநடிப்புடனான அபத்தப்பாணி நாடகம்.

இந்த உலகம் கொடுக்கக்கூடிய எல்லா நம்பிக்கைத் தோற்றங்களையும் எதிர்கொள்வதற்கும் எல்லா ஆசைகாட்டல்களையும் மறுப்பதற்கும் படிப்படியாகக்

# புகலிட நிகழ்வுகள்

கற்றுக் கொள்ளும் ஒரு மனிதன். உலகம் என்கிற நாடகமேடையில் வீசப்பட்டிருக்கும் ஒரு மனிதன் தனது இருப்பையும் உயிர்ப்பையும் தானாகத் தீர்மானிப்ப தில்லை. தனது எல்லைப்பாடுகள் குறித்தும் எந்த விதமான கட்டுப்பாடும் அவனுக்கில்லை.

இந்த மனிதனின் யதார்த்த நிலை, வாழ்க்கை நிலை, மானிட நிலை, அரசியல் நிலை என்பன அவனுக்கு அசௌகரியத்தையும் வெட்பத்தையும் தாகத்தையும் கொடுக்கிறது. பாலைவனத்தில் கண்களைக் கூசச் செய்யும் வெளிச்சத்தில் ஒரு மனிதன் தூக்கியெறியப்பட்டு விழுவதில் நாடகம் ஆரம்பமாகிறது. அவனுக்கு இந்தச் சூழல் பிடிக்க வில்லை. இருந்தும் வாழ்கிறான். வலப்பக்கத்தில் ஒரு சீழ்க்கை ஒலி அழைப்பு - ஆசைகாட்டல். இந்த வாழ்க் கையில் இருந்து தப்பித்துப் போகும் ஆசையை அவனிடத்தில் உருவாக்கும் அழைப்பு அது. அதற்கு எடுபட்டு அதன் வழி போகிறான். உடனே திரும்பவும் மேடைவெளியில் தூக்கி வீசப்படுகிறான். இவன் எங்கு செல்வான்? தன்னுடைய கட்டுப்பாட்டில் இல்லாத, தன்னை அலைக்கழிக்கின்ற வெளிவிசைகளினால் தனது வாழ்வு - இருப்பு கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதையும், இதிலிருந்து தப்பி ஓடிவிடமுடியாது என்பதையும் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறான். அடுத்த அழைப்பை அவன் சட்டை செய்வதில்லை. அலட்சியப்படுத்துகிறான். பாலைவனத்தில் நிழல் கொடுக்க ஒரு மரம் தோன்றுகிறது. அதுவும் தருணத்தில் நிழல்தர மறுக்கிறது. அலைக் கழிக்கும் ஆசைகாட்டல்களையும் ஏமாற்றங் களையும் அவன் எதிர்கொள்ள, எதிர்கொள்ள இவ்வுலகில் கிடைக்கக்கூடியவை எல்லாம் பலனற் றவை என்று உணர்ந்து கொள்கிறான்.

இந் நாடகம் பல்வேறு தளங்களில் புரிந்து கொள்ளப்படக்கூடியது. மனிதன் ஒரு குறியீடு. பல அரசியல் ஆசைகாட்டல்களுக்குள் இழக்கப்படும் ஒரு இனத்தையும் குறிக்கும் மனிதன். அன்றாட வாழ்வில் மனிதனை அழுத்தும் பல்வேறு விருப்புகள் மீதான ஈர்ப்புகள் ஏமாற்றமாகிப்போகும்போது கற்றுக் கொள்ளும் மனிதன். இலண்டன் நாடகப் பள்ளியைச் சேர்ந்த சந்தோஷ் ஆனந்தனின் நடிப்பு மனம் கொள்ளத்தக்கது.

மலைகள் வழிமறித்தால் :

கடந்த மூன்று வருடங்களாக தமிழ் அவைக் காற்றுக் கலைக்கழகத்தின் சார்பில் பாலேந்திரா, ஆனந்தராணி ஆகியோரால் நடத்தப்பட்டு வரும் நாடகப்பள்ளியைச் சேர்ந்த 25 சிறுவர்கள் நடித்த 'மலைகள் வழிமறித்தால்' இடம்பெற்றது. இது சீனப் பழங்கதை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. மாஓசேதுங் காலத்தில் தன்னம் பிக்கைக்கும் விடாமுயற்சிக்கும் எடுத்துக்காட்டாக





அவரால் அடிக்கடி பேசப்பட்ட கதையை ஒரு இசை நாடகமாக ஆக்கியிருந்தனர். சிவசேகரம் அவர்களின் பாடல்களுக்கு ஆ. வேந்தனின் இசையமைப்பில் உயிர் கொடுத்துப் பாடினர் அனுபவம் மிக்க இசைக்கலைஞர்கள். சிறுவர்கள் வார்த்தைகளின் அர்த்தம் உணர்ந்து அது வெளிப்படும்படியாக நன்றாக நடித்தனர். ஆச்சியாக நடித்த சிந்து பசுபதியின் நடிப்பு குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது.

அவசரக்காரர்கள் :

அவுஸ்திரேலியாவில் பாரதி பள்ளியை நடத்தி வரும் மாவை நித்தியானந்தனின் நாடகப் பிரதியான 'அவசரக்காரர்கள்', அவசர புத்தியால் நட்பை இழக்கும் இருவரின் கதை. அரங்கம் முழுவதும் சிரிப்பினால் அதிர்ந்தது.

காத்திருப்பு :

இடைவேளையைத் தொடர்ந்து ச. வாசுதேவன் எழுதிய 'காத்திருப்பு'. தாயகத்தில் தற்போது காணாமல் போவது அன்றாட நிகழ்வாகி விட்டது. வெள்ளை வான் ஆட்கடத்தல்களும் கொலைகளும் யார் எதற்காகச் செய்கிறார்கள் என்று தெரியாமல் நடந்து வருகிறது. பல்வேறு நாடுகளில் இந்தக் காணாமற் போவோர் பிரச்சினை இருந்தபோதும், தற்போது ஈழத்தில் இது உக்கிரமடைந்திருக்கின்றது. இருந்தும் இந்த நாடகம் நடக்கும் காலம் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்தபோது நடந்ததாகச் சொல்லப்படுகின்றது. உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட நாடகம். காணாமல் போன மகன் திரும்பவும் எப்போதாவது வருவான் என்று காத்திருக்கும் ஒரு தாயின் மனவேதனையைச் சொல்கிறது. தாயாக ஆனந்தராணியும் தகப்பனாக மனோ மனுவேற்பிள்ளையும் மேடையில் அந்தந்தப் பாத்திரங்களாகவே வாழ்ந்தனர். பார்வையாளர்கள் அனைவரையும் உருக்கிய நாடகம் அது.

சர்ச்சை :

இறுதியாக ஒரு குறியீட்டு பரீட்சார்த்த குறுநாடகம் 'சர்ச்சை'.



ஒரு வார்த்தை மட்டுமே திரும்பத் திரும்ப பேசப்படும். இதில் பா. சத்தியேந்திரன், கணேசலிங்கம், வாசுதேவன், வேந்தன், சந்தோஷ், பிரசாந்த் ஆகியோர் நடித்தனர்.

அர்த்தமற்ற ஒரு முரண்பாடுகூட பூதாகரப் படுத்தப்படும்போது அழிவுக்கு இட்டுச் செல்கிறது என்பதை பல்வேறு தளங்களில் சொல்லும் காத்திரமான ஒரு படைப்பாக அமைந்திருந்தது.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, தீவிர நாடகங்களைத் தொடர்ந்தும் மேடையேற்றி வரும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்திற்கு தமிழ் நாடக வரலாற்றில் ஒரு தனியிடம் உண்டு.

## புகலிட நிகழ்வுகள்

# வீ.ஆனந்தசங்கரி அவர்களுக்கு
## யுனெஸ்கோ விருது வழங்கல் வைபவம்
### 16.11.2006 — வியாழக்கிழமை

**பிரான்ஸ்**

**இளஞ்சேய்**



புகைப்படங்கள்: பிரதீபன்

அகிம்சையும் சகிப்புத்தன்மையையும் முன்னிலைப் படுத்தும் அகில உலகத் தலைவர்களுக்கு வழங்கப் படும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அதி உயர் சர்வ தேச யுனெஸ்கோ விருது தமிழர் விடுதலைக் கூட்ட ணித் தலைவரும், நீண்டகால அரசியல் வரலாற்றைக் கொண்டவருமான திரு வீ. ஆனந்தசங்கரி அவர் களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது வழங்கல் நிகழ்வு பாரிஸில் உள்ள யுனெஸ்கோ மண்டபத்தில் 16.11.2006 வியாழக்கிழமையன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆனந்தசங்கரி அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி பின்வருமாறு:

இன்று உலகெங்கணும் நிகழும் வன்முறைகள் பற்றியும் குறிப்பாக எனது சொந்த நாடான இலங்கை யில் நிகழும் வன்முறைகள் பற்றியும் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.

பொதுவாக எல்லா வன்முறைகளும் மனித உரிமை கள் மீறல், அநீதி, சகிப்புத்தன்மை அற்ற நிலை, பார பட்சம் காட்டப்படுதல் ஆகியவற்றையே அடிப்படை யாகக் கொண்டுள்ளன. ஒருவரின் உரிமைக்காக போராடுவதில் எவ்வளவு தான் நியாயங்கள் இருப்பினும் வன்முறையென்பது மேலும் வன்முறைக்கே வித்திடும் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட ஓர் உண்மை யாகும். ஒரு முறை வன்முறை ஆரம்பிக்கப்பட்டால் அது வெறுப்பு, அவநம்பிக்கை என்பனவற்றை உருவாக்கி அது நீண்டதோர் போராட்டமாக மாறக்கூடியது. அதுமட்டுமன்றி வன்முறையாளர்களை மிகவும் பலம் பெற்றவர்களாகவும் மாற்றி விடுவதோடு அவர்கள் வழமைக்கு திரும்புவதென்பது இயலாததொன்றாகி விடும். அவர்கள் தங்கள் செயற்பாடுகளை முன்னெ டுத்துச் செல்வதற்காக ஆயுதக்கடத்தல், போதைப் பொருட்கள் நிதி சேகரிப்பு ஆகிய முயற்சிகளில் ஈடுபடுவர். இது ஒரு பெரும் தொழிலாகி இதனை நிறுத்துவதென்பது இயலாத ஒன்றாகிவிடும். இதுவே இன்று இலங்கையில் நடக்கிறது. ஒருபுறம் எம்போன்ற சில நடுநிலையாளர்கள் பொது மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் போராடிக் கொண்டிருக்கும் அதேநேரத்தில் இலங்கையிலுள்ள தமிழ்ச் சமுதாயத்தின் பெரும்பாலாரின் கருத்தைப் பிரதிபலிக்காத தமிழீழ விடுதலைப் புலிகள் என்று தம்மை கூறிக்கொள்ளும் ஆயுதக் குழுவொன்று தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் மக்களை பிணைக் கைதிகளாக வைத்திருப்பதோடு மட்டுமன்றி தமது பயங்கரவாதத்தால் முழு நாட்டையுமே திகிலுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

இவர்கள் தமிழ் மக்களை விடுவிப்பதாக கூறிக் கொண்டு பெற்றோர்கள் ஏதும் செய்ய இயலாது இருக்கும் நிலையில் அவர் தம் பிள்ளைகளை வலுக்கட் டாயமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்துகின்றனர். இந்த அப்பாவிச் சிறுவர்கள் தீவிரவாதக் கோட்பாட்டா ளர்களால் மூளைச்சலவை செய்யப்பட்டு தற்கொலை குண்டுதாரிகளாகவும், பீரங்கிக்கு இரையாகவும் மாறு கின்றனர். அதேநேரத்தில் அவர்களின் குழந்தைகள் இவ்வாறு வலுக்கட்டாயமாக தற்கொலை குண்டுதாரி களாக மாற்றப்படாமல் வெளிநாடுகளில் பாதுகாப்பான வாழ்க்கை வாழ்கின்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய யூனியன், இந்தியா ஆகிய நாடுகளில் பயங்கரவாத இயக்கம் என தடைசெய்யப்பட்ட இந்த ஆயுதக் குழுவானது

# புகைப்பட நிகழ்வுகள்



பிராந்திய தேசிய மட்டங்களில் ஜனநாயக ரீதயில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல தலைவர் களை குறிப்பாக முன்னாள் இந்தியப் பிரதமர், முன்னாள் இலங்கை ஜனாதிபதி, தமிழரான முன்னாள் இலங்கை வெளியுறவு அமைச்சர், பல நடுநிலையான சிங்கள, தமிழ் அரசியல் வாதிகள், புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள் என்போரை கொலை செய்துள்ளது. இந்த பட்டியல் நீண்டுகொண்டே போகின்றது.

இது தவிர எழுபதாயிரத்துக்கும் அதிக மான போராளிகளும், அப்பாவி பொது மக்களும் விடுதலைப் புலிகளின் பயங்கர வாதத்திற்கு இரையாகி உள்ளனர். விடுத லைப் புலிகளின் இனச் சுத்திகரிப்பின் காரண மாக முஸ்லீம் மக்கள் வடக்கிலிருந்து அநீதி யான முறையில் விரட்டியடிக்கப்பட்டனர். சுனாமியின் பின்னரும் தமிழ் மக்களை விடுவிப் பதாகக் கூறிக்கொள்ளும் இவர்கள் சுனாமி நிவாரணத்தை பகிர்ந்தளிப் பதற்காக ஒரு இணைந்த அமைப்பு வேண்டுமென கூறி அதன் நிமித்தம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடை க்க வேண்டிய உதவிகளை தாமே அபகரித்து தமது கட்டுப்பாட்டில் வாழும் மக்களுக்கு உரிய முறை யில் நிவாரணம் சென்றடையாமலும் செய்தனர்.

ஏ-9 என அழைக்கப்படும் வட பகுதியை இணைக்கும் வீதியின் ஒரு பகுதியாலேயே யாழ் குடாநாட் டுக்கு பொருட்கள் எடுத்துச் செல்லப்




படும். அத்தனைப் பொருட்களுக்கும் கடுமை யான வரி விதிக்கப்பட்டு வந்தமையால் உணவுப்பொருள், விவசாய சாதனங்கள் உட்பட சகல பொருட்களும் கூடுதலான விலைக்கே விற்கப்பட்டு வந்தன. இவ்வாறு சேர்க்கப்படும் பணம் புலிகள் தம்மை ஸ்திரப் படுத்திக்கொள்ள வேண்டிய ஆயுதங்களை பெறவே உபயோகிக்கப்பட்டது.



2001ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் மிக அதிக விருப்புரிமை வாக்குகள் பெற்று மாவட்டத்தின் முதல் பிரதிநிதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட என்னை எனது சொந்த தேர்தல் தொகுதிக்கும் செல்ல முடியாது தடுத்து எனது உயிருக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தினர். அதன் பின்னர் விடுதலைப் புலிகள் வட பகுதியில் வாழும் மக்களுக்கு வாக்குரிமையை மறுத்த

# புகலிட நிகழ்வுகள்

தோடன்றி 2005 ல் நவம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடபகுதியைச் சேர்ந்த அனைத்து மக்களையும் வாக்களிக்கவிடாது செய்தனர். எனினும் நான் என் உள்ளம் ஏற்றுக் கொண்ட கருத்துக்களின்படி வாழ்வதிலிருந்து, அச்சம் என்னைத் தடுக்கும் வயதினை தாண்டிவிட்டேன் எனக் கொள்ளலாம்.

இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கும் ஏன் இந்த நாட்டிற்குமே இந்த அவலங்களை கொண்டு வந்த விடுதலைப் புலிகளின் அடக்கு முறைகளிலிருந்து இலங்கையிலுள்ள தமிழ் மக்களை மீட்டெடுக்க உதவும்படி சர்வதேச சமூகத்திடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே இந்த நாட்டு வருங்கால சந்ததியினருக்காக அமைதி, சமாதானம், அபிவிருத்தி ஆகிய விடயங்களையிட்டு நாம் மிகவும் தீவிரமாகவும் தாமதமின்றியும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். இதனை அடைவதற்கு இங்குள்ள யதார்த்த நிலைகளை பூரணமாக அறிந்திருக்க முடியாத சர்வதேச சமூகத்திடம் வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்களிடமும் நான் கேட்பது என்னவென்றால் வன்முறை வழிகளில் இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய விளையும் பயங்கரவாத அமைப்பிற்கு நிதி மற்றும் உதவிகளை செய்ய வேண்டாம் என்பதேயாகும். வட கிழக்கில் கடந்த 25 ஆண்டுகளாக மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் எனது கூற்றுக்கு சான்றாக அமையும். அவர்கள் அற்ப காரணங்களுக்காக பேச்சுவார்த்தைகளையும் சமரசங்களையும் ஒதுக்கி தள்ள விரும்புவார்கள். ஏனெனில் பேச்சுவார்த்தையின் பின் எடுக்கப்படும் இறுதித் தீர்வானது அவர்கள் இதுவரை காலமும் அடக்கு முறையின் பலனாக அனுபவித்து வந்த அதிகாரங்களையும் போதைவஸ்து, பயங்கரவாதம் மூலம் அவர்கள் பெற்று வந்த அதீதமான இலாபங்களையும் இல்லாது ஒழித்துவிடும். நிதி, அதிகாரம், கட்டுப்பாடு என அவர்கள் இதுவரை அனுபவித்து வந்த செல்வாக்குகள் அனைத்தையும் ஒரு சமரச தீர்வு இல்லாது ஒழித்து விடும். எனவேதான் வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்களையும், சர்வதேச சமூகத்தையும் இவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன்.

அதேநேரத்தில் இலங்கை அரசானது சிறுபான்மை மக்கள் ஏற்கக்கூடிய ஒரு சமஷ்டி அரசை முன்வைத்து அதிகாரப் பரவலாக்கலுக்கு வழிகோலும் தீர்மானத்தை விரைவில் முன் வைக்க வேண்டும். இதுவே இலங்கை மக்கள் அனைவருக்கும் நிலையான தீர்வை வழங்கக் கூடிய ஒன்றாகும்.

🍁 🍁 🍁 🍁 🍁

## ஸ்ருட்காட் கருத்தரங்கு

### 11—12 நவம்பர் 2006 — சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை

### ஸ்ருட்காட் (ஜேர்மனி)

**இளஞ்சேய்**

இலங்கையர் ஜனநாயக முன்னணி என்ற தமிழர் அமைப்பினால் 2006ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம், 12ம் திகதிகளில் ஜேர்மனியின் ஸ்ருட்காட் நகரத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

'இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் புலம்பெயர்வாழ் தமிழ்பேசும் மக்களும்' என்ற தலைப்பில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில். இலங்கை, பிரான்ஸ், நோர்வே, சுவிஸ், இங்கிலாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளில் இருந்து பல மாற்றுக் கருத்தாளர்களும் மறுத்தோடிகளும் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களைப் பரிமாறினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, வி.சிவலிங்கம் மற்றும் எஸ்.எம்.எம். பஷீர் உட்பட பல்வேறு ஜனநாயக சக்திகளுடன் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். மேற்படி கருத்தரங்குகள் போன்று பரவலாக புலம்பெயர் நாடுகளில் நடத்தப்படுதல் இன்றைய சூழலில் எமக்கு மிகவும் அத்தியாவசியமாகின்றது. இது ஒரு காத்திரமான நகர்வு என்று நாம் நம்பலாம்.

> **'இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வும் புலம்பெயர்வாழ் தமிழ்பேசும் மக்களும்'**

# புகலிட நிகழ்வுகள்

## மகாஉத்தமன் நினைவு நிகழ்வு

**05.11.06 — ஞாயிற்றுக்கிழமை**

**குரொய்டன் (ஐக்கிய இராச்சியம்)**

**இளவேந்தன்**

தமிழ்த் தேசிய விடுதலையின் ஆயுதப் போராட்ட ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் புரட்சிகர சிந்தனை யாளருமான மாஉ, என்றழைக்கப்படும் மகாலிங்கம் மகாஉத்தமன் அவர்கள் 29.10.2006 அன்று இலங்கை யில் காலமானார்.

ஆரம்பக் கல்வியை யாழ். சென்யோன்ஸ் கல்லூ ரியில் பெற்றுக் கொண்ட மகாஉத்தமன் உயர்கல்விக் காக இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார். அங்கு அவர் சர்வதேச முற்போக்கு புரட்சிகர இயக்கங்களுடன் தொடர்பு களை ஏற்படுத்திக்கொண்டார். தன்னுடைய அனுபவங்களை ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு பங்களித்தார். எண்பதுகளின் இறுதிகளில் ‘Journal of Eelam Studies’ என்னும் சஞ்சிகையின் பிரதான ஆசிரி யராக இருந்தார். தத்துவ கோட்பாட்டுத் துறையிலும் போராட்டத்திற்குப் பெரும்பங்களிப்பை வழங்கினார். தமிழ்த் தேசியம் குறித்த கோட்பாட்டு விவாதங்களில் இவருடைய பங்கு காத்திரமாய் இருந்தது. தொண் ணூறுகளில் இங்கிலாந்தில் இருந்து வெளிவந்த உயிர்ப்பு சஞ்சிகையில் இவரின் பங்களிப்பு மகத்து வமானது.

எப்போதும் அமைப்பு உருவாக்கத்தில் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். இயக்கங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக உடைந்து சிதறிக் கொண்டி ருந்த போதுகளிலும் இறுதிவரை நம்பிக்கை கொண்ட வராகச் செயற்பட்டார்.

இவருடைய நினைவாக ‘தமிழ் மாணவர் பேரவை’ நண்பர்களினால் ஐக்கிய ராச்சியத்தில் உள்ள குரொய்டன் என்னுமிடத்தில் உள்ள புனித சேவியர் தேவாலயத்தில் 05. 11. 2006 ஞாயிற்றுக்கிழமை அன்று ஒரு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவர் மாணவர் பேரவையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 25 வது பெண்கள் சந்திப்பு

**04.11.2006 — சனிக்கிழமை**

**ஸ்ருட்கார்ட் (ஜேர்மனி)**

**இளங்குயிலி**

25 வது பெண்கள் சந்திப்பு 04.11. 2006 சனிக்கிழமை ஜேர்மனியிலுள்ள ஸ்ருட்கார்ட் நகரில் நடைபெற்றது. இச் சந்திப்பில் ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், இலண்டன், இலங்கை ஆகிய நாடுகளிலிருந்தும் பெண்கள் கலந்து கொண்டிருந்தனர். முக்கியமாக இலங்கையில் இருந்து சூரியா பெண்கள் அமைப்பைச் சேர்ந்த விஜய லக்ஷ்மியும் Future Peace அமைப்பைச் சேர்ந்த பத்மி லியனகே ஆகியோர் வருகை தந்திருந்தார்கள்.

மங்கை சந்திப்பை ஆரம்பித்து வைத்து உரை யாற்றினார். அதைத் தொடர்ந்து வழமையான சுய அறி முகம் இடம்பெற்றது. முதலில் பெண்கள் சந்திப் பின்வரலாறு பற்றி உமா பேசினார். பெண்கள் மீதான வன்முறைகளுக்கெதிராகப் பலத்த கண்டனங்களை தெரிவித்தது மட்டுமல்லாமல், அவற்றுக்கு எதிரான பல தீர்மானங்களையும் நிறைவேற்றி உரிய தரப்பினருக்கு இதுபற்றித் தெரிவித்தும் வருகின்றோம் என்றும் கூறினார். பெண்கள் தொடர்பான நிறைய விடயங்கள் பற்றி இந்தச் சந்திப்புகளில் கலந்துரையாடி இருக்கின் றோம் என்பது நிதர்சனமானது என்றும் குறிப்பிட்டார். இதுவரை 9 பெண்கள் சந்திப்பு மலர்களை எமது சொந்தச் செலவில் வெளியிட்டிருக்கிறோம் என்று தெரிவித்தார். கணிசமான பெண்களை எழுதுவதற்கும், துணிந்து நின்று கருத்துச் சொல்வதற்கும் இச் சந்திப்பு பக்கபலமாக அமைந்திருந்தது என்று கூறமுடியும் என்றும் சொன்னார்.

அதைத் தொடர்ந்து விஜயலக்ஷ்மி “யுத்தத்தில் பெண்கள், சிறுமிகளின் நிலை” பற்றி பேசினார். கைது கள், காணாமல் போதல், ஆட்கடத்தல், சுற்றி வளைப்புக்கள், இடம்பெயர்வுகள், ஆயுதப்பிரயோகங் கள், பாலியல் வல்லுறவுகள், உயிரிழப்புக்கள் போன் றன இடம்பெறுகின்றபோது ஏற்படும் பாதிப்புக்கு பல பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய

# புகலிட நிகழ்வுகள்

தாய் உள்ளது. இது இலங்கையின் ஒட்டுமொத்த சமூகத்தையுமே பாதிக்கின்றது.

அடுத்த நிகழ்வாக, பத்மி லியனகே "இனவொற்றுமையுடன் சமாதானம் நோக்கி ஒரு அனுபவப் பகிர்வு" என்ற தலைப்பில் பேசினார். எங்களுடைய அமைப்பினூடாக நாங்கள் சகல இனத்தவர்களுடனும் இணைந்து சமாதானத்திற்கான பணியில் ஈடுபட்டிருக்கிறோம். நாம் போராடுகின்றோம். இலங்கையில் இனவாதம் இன்று மேலோங்கியிருப்பதற்கு புத்தபிக்குகளும், ஜேவிபியும் தான் முக்கிய காரணமாக உள்ளனர் என்று கூறினார். மேலும், இலங்கையில் அரசகரும மொழியாக சிங்களமும் தமிழுமே உள்ளது. தமிழர்கள் சிங்கள மொழியையும் சிங்களவர்கள் தமிழ் மொழியையும் கற்றால் அவர்களுக்கான அடிப்படை பிரச்சினையை தாங்களே பேசி தீர்க்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் எனவும் சுட்டிக் காட்டினார். அங்குள்ள அன்றாட வாழ்வு யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

தொடர்ந்து ரஞ்சி, ஆழியாளின் 'துவிதம்', பெண்ணியாவின் 'என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்புவை', விஜயலக்ஷ்மியின் 'வானம் ஏன் மேலே போனது', செல்வியின் Stories from Tamil Women writing ஆகிய நூல்களை அறிமுகம் செய்தார்.

அடுத்து 'இலங்கைப் பெண்களின் எழுத்தும் தாண்ட முடியாத சிக்கல்களும்' என்ற தலைப்பின் கீழ் விஜயலக்ஷ்மியும் தில்லையும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இறுதி நிகழ்வாக, 'பெண்சிசுக் கொலை' பற்றி பரிமளா பேசினார். பெண்கள் சந்திப்பின் அடுத்த தொடர் பிரான்சில் நடைபெற முடிவாகியது. மேரி நன்றி தெரிவித்துப் பேசினார். இறுதியாக மூன்று குறும் படங்கள் திரையிடப்பட்டன.

25வது பெண்கள் சந்திப்பில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்:

✷ இலங்கையில் பெண்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பற்ற நிலையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அரசு, மற்றும் சகல தரப்பினரையும் கோருகிறோம்.

✷ வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆயுத இயக்கங்கள், யுத்தத்திற்காக சிறுவர், சிறுமியர்களைப் பிடித்துச் செல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

✷ இலங்கையில் சமாதானத்தை கொண்டுவர சகல மட்டங்களிலும் அழுத்தங்களை கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

✷ சமாதானப் பேச்சுவார்த்தைகளில், யுத்தத்தில் பெண்களின் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு, பெண் பிரதிநிதிகளையும் சேர்த்து கொள்ளும்படி கோருகிறோம்.

✷ இந்தியாவில் நகரச் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கைகளினால் மலம் அள்ளுவதைத் முற்றாகத் தடுக்கும்படி கோருகிறோம்.

✷ பெண் சிசுக்கொலைகளைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுக்கும்படி இந்திய அரசிற்கு கோரிக்கை விடுகிக்கின்றோம்.

✷ பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் பெண்களைக் கொச்சைப்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்களை உபயோகிப்பதையும் பெண்களை இழிவுபடுத்துவதையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம், எதிர்க்கின்றோம்.

✦ ✦ ✦ ✦ ✦

## புலம்பெயர்ந்தோரும் சமாதானமும் கருத்தரங்கு

**27—29.10.2006 — வெள்ளி, சனி, ஞாயிறு**

**பாட் பொல் (ஜேர்மனி)**

**இளஞ்சேய்**

ஜெர்மனியின் தென் மாநிலங்களில் ஒன்று பாடன் வுற்றன்பெர்க். ஸ்ருட்கார்ட் என்ற பாரிய தொழில் நிறுவனங்கள் நிறைந்த பெரு நகரம் அங்கிருக்கிறது. அந்த இயந்திர சுறுசுறுப்பு இரைச்சல்களை விட்டு ஒதுங்கி சில குன்றுகளுக்கு அப்பால் இருக்கின்றது பாட் பொல் என்ற ஒரு குக்கிராமம். அங்கேதான் புரட்டஸ்தாந்து அக்கடமி கட்டி வைத்திருக் கின்றனர். இந்த அக்கடமி இருப்பதால் தான் அப்படி ஒரு கிராமம் இருப்பதாக வெளியுலகிற்குத் தெரிகிறது. "இலங்கையின் சமாதான ஒப்பந்தம்- இடம்பெயர்ந்தோர் எதிர்கொள்ளும் சவால்கள்" என்ற 3 நாட்கள் கருத்தரங்கு 2006 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ம் திகதி தொடக்கம் 29ம் திகதி வரை நடைபெற்றது. 'மோதல் தவிர்ப்பு, ஜனநாயகம் மற்றும் சிறுபான்மையினர் உரிமைக்கான சமூகம்', சுருக்கமாக கெகொடெம் என்கின்ற அமைப்பு, இடம்பெயர்ந்த இலங்கையரின் சர்வதேச வலைப்பின்னல் (INSD) மற்றும் ஸ்ருட்கார்ட் இலங்கையர் சங்கம் ஆகியன இணைந்து இந்தக்

# புகலிட நிகழ்வுகள்

கருத்தரங்கினை ஒழுங்கு செய்திருந்தனர். ஐரோப்பாவின் பல நாடுகளில் இருந்தும் கலந்து கொள்வோருக்கிடையிலான தொடர்பாடல் வசதிகருதி ஆங்கில மொழியே கருத்தரங்கின் மைய மொழியாக இருந்த போதும், நேரடி தமிழ், சிங்கள மொழிபெயர்ப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கருத்தரங்கில் சிங்களத் திரைப்பட இயக்குநர் பிரசன்ன விதானகே, கிழக்கிலங்கை சூரியா பெண்கள் அமைப்பைச் சேர்ந்த விஜயலட்சுமி, சமாதான எதிர்காலம் என்கிற அமைப்பைச் சேர்ந்த பத்மி லியனகே, ஜனநாயக உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த சி. சிவகுருநாதன், மற்றும் பலர் இலங்கையில் இருந்து வந்து கலந்து கொண்டனர். சுதந்திரத்திற்குப் பின்னான இலங்கையில் அரசியல் வரலாறு, இன்றைய இலங்கை, இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சாத்தியமான முன்னெடுப்புக்கள், சுனாமி அனர்த்தத்தின் பின் மீள்நிர்மாணம், இனப்பிரச்சினைகளுக்கான சாத்தியமான தீர்வுகள் போன்ற தலைப்புக்களில் கருத்தாடல்கள் இடம் பெற்றன.

கருத்தரங்கு ஒழுங்கு, நிர்வாகம் போன்றவற்றில் நீண்டகால அனுபவம் மிக்க இந்த அக்கடமியில் இலங்கை பற்றிய கருத்தரங்கு கடந்த 2 வருடங்களாக நடைபெற்று வருகின்றது. இதன் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் ஆர்வமுள்ள இடம்பெயர்ந்த சமூகம் ஒன்றுகூடுவது மட்டுமல்ல சர்வதேச சமூகத்தை தீர்வை நோக்கிய ஆர்வத்திற்கு உட்படுத்துவதும் நடைபெறுவதற்கு இது போன்ற பல கருத்தரங்குகள் நடைபெற வேண்டும்.

## முஸ்லிம் மக்களும் பொது இணக்கப்பாட்டிற்கான வேலைத்திட்டமும் கலந்துரையாடல்

**01.10.2006 — ஞாயிற்றுக்கிழமை**

**றைஸிலிப் (இங்கிலாந்து)**

**இளவேந்தன்**

2006ம்ஆண்டு ஒக்டோபர் 1ம் திகதி இலண்டனின் புறநகர்ப்பகுதியான றைஸிலிப்பில் ‘முஸ்லிம் மக்களும் பொது இணக்கப்பாட்டிற்கான வேலைத்திட்டமும்’ என்னும் தலையங்கத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு ராகவன் தலைமை தாங்கி நெறிப்படுத்தினார். இலங்கையில் இருந்து வருகை தந்திருந்த ‘மூன்றாவது மனிதன்’ சஞ்சிகை ஆசிரியர் பௌசர் இதில் சிறப்புப் பேச்சாளராக உரையாற்றினார்.

ராகவனின் தலைமையுரையுடன் ஆரம்பமாகிய இக் கலந்துரையாடலில் நாவலன், நிர்மலா, நீதிராஜா, நஸ்சாருதீன், உஸாகித், பாலா, போல், சிவலிங்கம், அசோக், அகிலன் ஆகியோர் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

தேசியவாதம் என்பதே குறுகிய நோக்கத்தைக் கொண்டதுதான் என்றும் அதற்கான முன்னெடுப்புகள் எப்போதும் மனித சமூகத்தை முன்நோக்கி நகர்த்தும் ஒரு தீர்வை அளிக்காது என்றும் அநேகமானவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

எப்படி இருப்பினும் தாங்கள் ஒடுக்கப்படுவதாக ஒரு இனம் அல்லது இனக் குழுமம் கருதுமிடத்து அதற்கான காரணங்களைப் புரிந்து கொள்வதற்கு ஏனைய சாரார் முயற்சிக்க வேண்டுமென்றும் நல்லிணக்கப்பாட்டுக்கான தீர்வுகளை முன்னெடுப்பதற்கான விடயங்கள் மீது கவனம் செலுத்துவது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## புகலிட நிகழ்வுகளின் தொகுப்பு

**தெருக்கூத்தன்**